## சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு
## Uni5 பக்த விஜயம் - 76. ஸ்ரீபுரந்தரதாஸர்

ஊர்: பண்டரீபுரத்துக்கு அருகில் உள்ள வேமன்னபுரி

இயற்பெயர்: ரகுநாத ராவ்

பெற்றோர்:  மாதவ்ராவ் - ரத்னா பாய்

மனைவி: ஸ்ரீமதி.லக்ஷ்மி பாய்

மாமனார்: கேசவ் ராவ்

மகள்: ருக்மிணீ பாய்

குரு: தேவதாஸி புரந்தரி தேவி

**அறிமுகம்:**

கர்நாடகம், மஹாராஷ்டரம் இணையும் பகுதிகளில் வரலாறு நிகழ்ந்தது.எளிய அழகிய கன்னட மொழியில் பக்தி இலக்கியத்தை இசை மூலம் அறிமுகம் செய்தவர் இவர். இக்கால கர்நாடக சங்கீதத்தின் ராகங்களை இலக்கணப்படி முறை செய்தார்."**கர்நாடக இசையின் தந்தை**" எனப்படுகிறார்.இசை மூலம் பாவ பக்தியை இறைவனுக்கு அர்ப்பணித்து முக்தி அடைந்தவர்.

**தொழில் அளித்த குண மாற்றம்:**

வட்டிக்கடை.

வட்டிக்கடை மூலம் அதிகம் பொருள் சேரும் நிலையில் பணத்தைச் சேர்க்கும் ஆசையில் மிக மிகக் கருமித்தனம் இவருள் வந்தது.

யாருக்கும் எதற்கும் அணுவளவு கூட உதவக்கூடாது என்ற எண்ணம் மேலோங்கியது.

குறிப்பாக ஆன்மீக உலகில் இருக்கும் அன்பர்களுக்கு இவர் வெறுப்பையே தானம் அளித்தார்.

இதனால் பெற்றோரும் மனைவியும் மிக மிக மனம் கலங்கி வாழ்ந்தனர்.

பணத்தாசையின் உச்சத்தில் அநியாய வட்டியும் வாங்க ஆரம்பித்தார்.

**முதியோராய் வந்த இறைவன்**

ஒரு பிராமணக் கிழவர் தன் மகனின் கல்யாணத்துக்குப் பண உதவி கேட்டு இவரிடம் வந்தார்.தானத்தின் பயனை எடுத்துக் கூறி பவ்யமான முறையில் தானம் கேட்டார்.அதனால் கோபம் கொண்ட ரகுநாத ராவ் கிழவரை அடித்துத் துரத்தி விடுகிறார்.

**கணவனிடம் இல்லாதது மனைவியிடம் இருக்குமா?**

இவரது மனைவியைப் பார்த்தால் உதவி கிடைக்கும் என்று கிழவர் லக்ஷ்மி பாயை அவரது வீட்டில் சந்தித்தார்.அம்மையாரும் தானத்தின் மேன்மையை உணர்ந்தவர்.அதனால் தன் மூக்குத்தியை தானமாக அளித்து விடுகிறார். தனக்கு ஏற்பட்ட பற்றற்ற தன்மை, தன்னில் பாதியான தன் துணைவனுக்கும் வர வேண்டும் என்ற சங்கல்பத்தில் இதைச் செய்கிறார்.உண்மையான ப்ரார்த்தனை வீண் போகுமா?

**மூக்குத்தி செய்த மாயம்**

மூக்குத்தி இவர்களது அடகுக் கடைக்கே விற்க எடுத்துச் செல்லப்பட்டது.அதைக் கண்ட ரகுநாத ராவ் மிகவும் கோபத்தில் துடித்து, வீடு வந்து மனைவியை சோதிக்க, அவரோ தூய அன்பால் மெய்யுணர்வில் பாண்டுரங்கன் அருளால் அதே போல் வேறு ஒரு மூக்குத்தி ஒன்றைப் பெற்றுத் தர, அதன் உண்மையை அறிந்த அவனுள் மாற்றம் ஏற்பட்டது.

பூர்வ ஜென்மத்தின் தேவையற்ற வாசனைகள் போக, ரகுநாத ராவ் மெதுவாக ஆன்மீகப் பரிணாமம் கொள்கிறான்.அதில் அவன் மனைவிக்குப் பெரிய பங்கு உண்டு. தம்பதியினர் இல்லறத்தின் உண்மைப் பலனை அனுபவிக்க ஆரம்பித்தனர்.

தன் மனைவிக்கும் பொருள் பற்று இல்லாததை உணர்ந்து இவரும் தன் பொருள்கள், சொத்துக்கள் என அனைத்தையும் தானம் செய்து விட்டு, மிகவும் உண்மையான உழைப்பைக் கைக்கொண்டார்.வருவதில் எளிமையாக நிறைவாகக் குடும்பம் சென்றது.ஒரே மகள் அருமையான பக்தியும் ஆன்மீக ஞானமும் இசைக் கலையும் கைவரப்பெற்று வளர்ந்தாள்.

**இசைக் குடும்பத்தின் உன்னதப் பணி**

குடும்பமே இசை மூலம் மிக எளிய தூய ஆன்மீக தத்துவங்கள் கொண்ட பக்திப் பாடல்களைப் பாடினர்.ஊர் ஊராகச் சென்று ஸ்தலப் பெயர் கொண்ட பக்திப்பாடல்களைத் தமிழுக்கு அடுத்து கொண்ட மொழி கன்னடம் ஆகும்.அதை அம்மொழியில் புகுத்தியவர் புரந்தர தாஸர்.

**சமூஹம் செய்வித்த திருமணம்**

இவரது உயர்ந்த பக்தியை உணர்ந்த வயோதிகர் ஒருவர் கிஷ்கிந்தாபுரி என்ற ஊரில் வாழ்ந்த கேவர் ராவ் என்ற பணக்காரரின் மகனை ருக்மிணி பாய்க்கு மணம் முடித்து வைத்தார்.அனைத்துச் செலவுகளையும் தானே ஏற்றுக் கொண்டார்.

**குருவான தாஸி**

ஊர் ஊராகத் தன் மனைவியுடன் சென்று தெய்வங்களைப் பாடி, அவ்வூர் மக்களுக்கு ஆன்மீகத்தை உணர்த்திய இவர் திருமலையில் சில காலம் தங்கினார்.அப்போது கோயிலின் தேவதாஸி புரந்தரி என்பவரின் வீணை இசைக்கு மலையப்பன் சிறு கண்ணனாக ஆடும் தரிசனத்தை இவர் பெற்றார்.அன்று முதல் அவளையே தன் குருவாக ஏற்று ”புரந்தர தாஸ்” என்ற திருப்பெயரையும் கொண்டு, அவளிடம் தீக்ஷை பெற்று பக்தி செய்தார்.

**மிக உயர்ந்த பொறுப்பு**

படிப்பறிவே இல்லாத ஒருவனுக்கு எழுதப் படிக்க ஆரம்பித்தும் வைக்கும் பணி மிகவும் சாமார்த்தயமானது அன்றோ? அதைப் போல் தான் இவர் வாழ்ந்த காலத்தில் மக்களுக்கு பக்தியையும் ஆன்மீகத்தையும் போதிக்க வேண்டி இருந்தது.நீண்ட காலத்துக்குப் பின் பாரத தேசத்தில் இசையின் மூலம் ஆன்மீகத்தைப் பரப்பும் பணியை இவர் மேற்கொள்கிறார்.காரணம் இவரது காலத்தில் படையெடுப்புகளால், மத வேற்றுமைகளால், சாதிக் கொடுமைகளால் தேசம் சீர் குலைந்து கிடந்தது.கலைகள் வெறும் பணக்காரர்களின் போகமாக மாறியது.குறிப்பாக புலன் இச்சையை, பாலுணர்வை ஏற்படுத்தும் கலைகளாக மாறின.அதைத் தடம் மாற்றிய பொறுப்பைப் புரந்தர தாஸ் ஏற்றுக் கொண்டார்.

”**கர்நாடக இசையின் தந்தை**” என்பது இவர் ராக இலக்கணங்களை வகுத்ததற்காக அல்ல.தந்தை என்பவர் அறிவைத் தருபவர்.கலைகளை ஆன்மீகத்துக்குப் பயன்படுத்த வேண்டும் என்ற உயர்ந்த அறிவை மக்களுக்கு அளித்தவர்.அதனால் தான் இவர் இப்பட்டத்தாக் இன்று நம்மால் வணங்கப்படுகிறார்.
பலகாலம் தன் மனைவியுடன் வாழ்ந்த இவர் பண்டரீபுரத்தில் முக்தி பெற்றார்.

ஹரி ஓம்!